**மாதிரி வினாத்தாள்**

தாவரங்களில் இனப்பெருக்கம் - பகுதி III

10th Standard

**அறிவியல்**

Reg.No. : | | | | | | |

I.அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.

II.நீலம் அல்லது கருப்பு மையினை மட்டுமே எழுதுவதற்கு பயன்படுத்த வேண்டும்.

Time : 01:00:00 Hrs

Total Marks : 50

## பகுதி - அ

5 x 1 = 5

1) காற்று மூலம் மகரந்தச் சேர்க்கை ....................இல் நடைபெறுகிறது.

(a) வாலிஸ் நேரியா (b) புல் (c) தென்னை (d) ஊமத்தை

2) .............................. அமைப்பு பூச்சிகள் மூலம் அயல் மகரந்தச் சேர்க்கை நடைபெற ஏதுவாகிறது.

(a) இறகுகளையுடைய மகரந்தத் தூள், கிளைத்த சூல்முடி (b) நிறமுள்ள அல்லிவட்டம், தேன் சுரத்தல்

(c) குறைவான மகரந்தமுடைய கொத்தான மலர்கள் (d) கோழை சூழ்ந்த மகரந்தத்தூள்

3) கருவுற்றபின் சூல் ................................ ஆக மாறுகிறது.

(a) விதை (b) கனி (c) கருஊண்(எண்டோஸ்பர்ம்) (d) கனித்தோல்(பெரிகார்ப்)

4) பின் வருவனவற்றில் சரியாக பொருந்தியது.......................... .

(a) பொய்க்கனி - மா (b) கூட்டுக்கனி - ஆப்பிள் (c) திரள்கனி - நெட்டிலிங்கம் (d) கேரியாப்சிஸ் - வாழை

5) பொருந்தாத இணை ............................. .

(a) இருபுற வெடிகனி - உலர்வெடி கனி (b) சிப்செலா - உலர் வெடியாக்கனி (c) போம் - சதைக்கனி

(d) ரெக்மா - இரு புற வெடிகனியைப்போல

## பகுதி - ஆ

6 x 2 = 12

6) வரையறு - கருவுறுதல்.

7) பின்வருவனவற்றில்காணப்படும் மகரந்தசேர்க்கைக்கானகாரணிகளைப் பெயரிடுக.

அ) நல்ல மணமும் தேன் சுரப்பியும் கொண்ட பல வண்ணங்களை கொண்ட மலர்கள்.

ஆ) நிறமற்றது /மணமற்றது /தேன்சுரப்பு அற்றது.ஆனால் மகரந்தத்துகள்கள் உலர்ந்த, இலேசான, தூள்களாக இருக்கும். சூல்முடி இறகு போன்று காணப்படும். மேற்கண்ட இரண்டு வகை மகரந்தச்சேர்க்கை நடைபெறும் தாவரங்களைக் குறிப்பிடுக.

8) கூட்டுக்கனி------------- ன் அனைத்து மலர்களிலிருந்து உருவாகிறது.

-------------கனியானது ஒரு மலரின் இணையாத பலசூலக இலைகளைக் கொண்ட மேல்மட்டச் சூற்பையிலிருந்து உருவாகிறது.

9) கனிகளும் / விதைகளும் பரவுதல்-பொருத்துக

| | |
|---|---|
| அ) ஆட்டோகோரி | i)தாமரை |
| ஆ) அனிமோகோரி | ii)டிரைடாக்ஸ் |
| இ)ஹைடிரோகோரி | iii)ஸாந்தியம் |
| ஈ)சூகோரி | iv)பால்சம் |

10) கீழே கொடுக்கப்பட்டுள்ள தகுந்த சொற்குறிப்புகளைக் கொண்டு பத்தியை நிரப்புக. (விதை,கனி,மகரந்த சேர்க்கை,பரவுதல், முளைத்தல்,கருவுறுதல் ,மலர்கள்,இனப்பெருக்கம் ) ராமு தன் தந்தையுடன் வயலுக்குச் சென்றான் . அவன் சிறிதளவு கடுகு விதைகளைத் துவினான்.

சிலநாட்களுக்குப் பிறகு, விதைகள்________லைக் கவனித்தான். அந்த விதைகள் தாவரங்களாக வளர்ச்சி அடைந்தது _______களைத் தோற்றுவித்தன. இந்த மலர்கள் உருவாக்கிய மகரந்தத்தூள்________ மூலம் சூழ்முடியை அடைந்தன. ________நிகழ்வின் போது ஆண் கேமீட் அண்டத்துடன் இணைகிறது.

11) தென்னையில், கனி நீரின் மூலம் (ஹைடிரோகோரி) பரவுகின்றது. தேங்காய் காற்றின் மூலம் (அனிமோகொரி) பரவுவதாக எடுத்துக் கொண்டால், பெற்றிருக்க வேண்டிய தகவமைப்புகள் இரண்டினைக் குறிப்பிடுக.

## பகுதி - இ

6 x 5 = 30

12) உலர்கனிகளின் பெயர்பட்டியல் கீழே கொடுக்கப்பட்டுள்ளன. அக்கனிகளை, உலர்க்கனியின் வகைகளுக்கேற்ப வகைப்படுத்துக. (பருத்தி, டிரைடாக்ஸ் , நெல், ஆமணக்கு, கொத்தமல்லி, அவரை, பட்டாணி, எருக்கு, அந்திமந்தாரை, முந்திரி, கருவேலம், வெண்டை) அ)அக்கீன் ஆ)கேரியாப்சிஸ் இ)சிப்செலா ஈ)கொட்டை உ)க்ரிமோகார்ப் ஊ)லொமெண்டம் எ)ரெக்மா ஏ)காப்சூல் அறைவெடிகனி ஐ) காப்சூல் தடுப்புச்சுவர் வெடிகனி ஒ)ஒருபுற வெடிகனி ஓ)இரு புறவெடிகனி

13) மோனிஷ் சமையலறைக்குள் நுழைய நேர்ந்த பொழுது, அவனின் தாய், கதம்பசாம்பார் தயார் செய்வதற்குத் தேவையான பொருள்கள் வைத்திருந்தார். மோனிஷ் அப்பொருள்களைப் பார்க்கின்றான். கனிகளின் வகைகளுக்கேற்ப, சாம்பாருக்குத் தேவையான பொருள்களைப் பிரித்துவைக்க மோனிஷ்க்கு உதவுங்கள். (பருப்பு, புளி, கத்தரிக்காய், தக்காளி, முருங்கைக்காய், கொத்தமல்லி, கடுகு, வெண்டைக்காய், மா)

14) கீழே கொடுக்கப்பட்டுள்ள குறிப்புகளின்படி இருவித்திலை விதையின் பாகங்களைப் பெயரிடுக.

அ)ஆரம்பநிலைவேர் _________.

ஆ)ஆரம்பநிலைதண்டு_________.

இ)கருவிற்குத் தேவையான உணவு அடங்கிய சதைப்பற்றுள்ள பகுதி_________.

ஈ)விதைகளைச் சுற்றியுள்ள வெளிபாதுகாப்பு உறை _________.

உ)விதையுறையில் காணப்படும் சிறிய துளையின் பெயர் _________.

15) மகரந்தசேர்க்கையின் வகைகள் யாவை? எந்த வகை மகரந்தசேர்க்கை நன்மை தரக்கூடியது? ஏன்?

QB365 QUESTION BANK 365 https://www.qb365.in

16) தன்மகரந்தச்சேர்க்கை (ஆட்டோகேமி) என்றால் என்ன? அதன் நன்மைகளையும், தீமைகளையும் குறிப்பிடுக.

17) மகரந்தச்சேர்க்கை என்றால் என்ன? மகரந்தச்சேர்க்கைகான பல்வேறு உயிருள்ள, உயிரற்ற காரணிகளை விளக்குக.

*****************************************

QB365 QUESTION BANK 365 https://www.qb365.in